**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்**

முன்னிலை: **திரு. S.கணேஷ், எம்.காம்., எம்.எல்.,**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,(மு.கூ.பொ)
ஜெயங்கொண்டம்.

2024 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 23 ஆம் நாள் செவ்வாய்கிழமை

**அசல் வழக்கு எண் (O.S.) 39/2023**

**CNR.No.TNAL05-000054-2023**

பெரியசாமி. வயது 70,
த/பெ. கணபதி,
உடையார்பாளையம் வட்டம், அரியலூர் மாவட்டம்.
தற்காலம், தெற்குத் தெரு, இடையக்குறிச்சி கிராமம்,
ஆண்டிமடம் வட்டம். ... வாதி

/எதிர்/

1) ராமசாமி, வயது 54,
த/பெ. தங்கராசு
உடையார்பாளையம் வட்டம், அரியலூர் மாவட்டம்.
தற்காலம், பள்ளிக்கூடத்தெரு, இடையக்குறிச்சி கிராமம்,
ஆண்டிமடம் வட்டம், அரியலூர் மாவட்டம்.
2) சாமிநாதன், வயது 65,
த/பெ. தங்கராசு
3) நாகராஜன், வயது 60,
த/பெ. தங்கராசு
4) அஞ்சலை அம்மாள், வயது 80,
க/பெ. தங்கராசு
2 முதல்4 பிரதிவாதிகள்
பள்ளிக்கூடத்தெரு, இடையக்குறிச்சி கிராமம்,
ஆண்டிமடம் வட்டம், அரியலூர் மாவட்டம். ... பிரதிவாதிகள்

வழக்கு தாக்கல் நாள் : 17.02.2023
வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் : 17.02.2023
வழக்கு மூலம் ஏற்பட்ட நாள் : 01.02.2023
இடம் : இடையக்குறிச்சி கிராமம்,

நீதிமன்ற முத்திரைக் கட்டணத்திற்கும் அதிகார வரம்பிற்கும் தாவா சொத்துக்களின் மதிப்பு ரூ.1000/-ம், இதற்கு வாதியிடமிருந்து தமிழ்நாடு நீதிமன்ற முத்திரைக் கட்டணச் சட்டம் பிரிவு 27(சி)-ன் படி ரூ.30/- செலுத்தப்பட்டுள்ளது.

தாவா சொத்தில் வாதியின் நிம்மதியான அனுபவத்தில் இப்பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ, முகவர்களோ அத்துமீறி பிரவேசிக்காமல் இருக்க வேண்டி நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கியும், தாவா செலவுத்தொகையை பிரதிவாதிகளிடமிருந்து வாதிக்கு கிடைக்கவும், இன்னும் கோர்ட்டாராவர்களுக்கு யுக்தமாக தோன்றும் இதர நியாய பரிகாரங்கள் வழங்க தீர்ப்பு செய்ய வேண்டுமென்று உ.வி.மு.ச.கட்டளை VII விதி 1–ன் கீழ் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இவ்வழக்கு என் முன்பாக 02.01.2024 அன்று இறுதியாக விசாரணைக்கு வந்ததில் வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.P.முருகேசன் அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.சண்முகநாதன், அவர்கள் முன்னிலையாகியும், 1 முதல்4 பிரதிவாதிகள் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய போதி கால அவகாசம் கொடுக்கப்பட்டும் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாத காரணத்தால் தோன்றா தரப்பினர்களாக கருதப்பட்டும், வாதியின் தரப்பு வாதம் மற்றும் வழக்குரை, சாட்சி மற்றும் சான்றாவணங்களைப் பரிசீலித்து இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்.

**<u>தீர்ப்பாணை</u>**

1. வாதியின் வழக்கு செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது.
2. தாவா சொத்தில் வாதியின் நிம்மதியான அனுபவத்தில் இப்பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ, முகவர்களோ அத்துமீறி பிரவேசிக்காமல் இருக்க வேண்டி நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கியும் இந்நீதிமன்றம் தீர்ப்பாணை பிறப்பிக்கப்படுகிறது.
3. வழக்கு செலவுத்தொகை ரூ.780/–ஐ பிரதிவாதிகள் வாதிக்கு செலுத்த வேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.

**<u>செலவுத்தொகை விபரம்</u>**

| வ.எண் | விபரம் | வாதி<br>ரூ. பை |
|---|---|---|
| 1. | வக்காலத்து | 5.00 |
| 2. | பிராது தயார் செய்ய | 200.00 |
| 3. | மனுக்கள் தயார் செய்ய | 40.00 |
| 4. | சம்மன் படி | 35.00 |
| 5. | வழக்கறிஞர் கட்டணம் | 500.00 |
| | கூடுதல் | 780.00 |

**<u>சொத்துவிபரம்</u>**

அரியலூர் ரி.டி., ஆண்டிமடம் சப்.டி., இடைக்குறிச்சி கிராமத்தில் நத்தம் சர்வே எண்.123–3 –2.27 சென்டில் பெரியசாமி (வாதி) பாக மனைக்கு (கி) சாமிதுரை வகையறா மனைக்கு (மே) ரோட்டிற்கு (வ) அஞ்சலையம்மாள் (4 ம் பிரதிவாதி) கிரய மனைக்கு (தெ) இதில் கீழ்மேல் ஜாதியடி 15, தென்வடல் ஜாதியடி 80 (1200 சதுரடி) சதுரடி மனையும் அதில் கட்டடப்பட்டுள்ள வீடு உட்பட (புதிய நத்தம் சர்வே 123–22 ல் கட்டுப்பட்டது).

இத்தீர்ப்பாணையானது 2024 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 23 ஆம் நாள் கையொப்பமிடப்பட்டு இந்நீதிமன்ற முத்திரையுடன் வழங்கப்படுகிறது.

(ஒம்/–திரு. S.கணேஷ், எம்.காம்., எம்.எல்.,)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,(மு.கூ.பொ)
ஜெயங்கொண்டம்.